# பத்திரிக்கை செய்தி

## பெண்கள் சுய உதவிக்குழுவின் விண்ணப்பங்களை பதிவு செய்வதற்கு ரூ.30,000/- லஞ்சம் கேட்டு பெற்ற சார் பதிவாளர் மற்றும் உதவியாளர் கைது

புகார்தாரரர் சுரேஷ் என்பவர் இணையதளம் மூலம் மகளிர் சுய உதவி குழு சங்கங்களை புதிதாக பதிவு செய்தல் மற்றும் ஏற்கனவே பதிவு செய்திருந்தவற்றை புதுப்பித்தல் போன்ற பணிகளை செய்து வருகிறார், அவ்வாறு ஈரோடு மாவட்டத்தில் உள்ள மகளிர் சுய உதவி குழுக்கள் சங்கங்களை புதுப்பிப்பதற்காக இணையதளம் மூலம் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்து அது தொடர்பாக 16.02.2023 அன்று சீட்டு மற்றும் சங்கங்களின் சார்பதிவாளர் திருமதி ராஜேஸ்வரி அவர்களை அவரது அலுவலகத்தில் வைத்து மகளிர் சுய உதவி குழுக்களின் உறுப்பினர்கள் இரண்டு பேருடன் சந்தித்தபோது அவர் மேற்படி சங்கங்களின் ஆவணங்களை ஆய்வு செய்து கொடுப்பதற்காக ஒரு சங்கத்திற்கு ரூபாய் 8000 வீதம் கொடுக்க வேண்டும் என்றும் ஆவணங்கள் கொடுக்கப்பட்டிருந்த நாலு சங்கங்களுக்கு மொத்தம் ரூபாய் 32 ஆயிரம் கொடுக்க வேண்டும் என்றும் அவர் ஆய்வு அறிக்கை கொடுத்த பின்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய உதவியாளர் திரு தமிழ்ச்செல்வன் என்பவர் அவருக்கு ஒரு சங்கத்திற்கு 1500 விதம் நாலு சங்கங்களுக்கு ரூபாய் 6000 கொடுக்க வேண்டும் என்றும் வற்புறுத்தி கேட்டுள்ளார், இதைத்தொடர்ந்து ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையில் திரு சுரேஷ் என்பவர் கொடுத்த புகார் பேரில் இன்று பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது, அப்போது சுரேஷ் என்பவரிடமிருந்து சார் பதிவாளர் ரூபாய் 24 ஆயிரத்தை கேட்டு பெற்றுள்ளார், அதேபோல் தமிழ்ச்செல்வன் என்பவர் ரூபாய் 6 ஆயிரத்தை கேட்டு பெற்றுள்ளார், அவர்களை லஞ்ச ஒழிப்புத் துறையினர் கையும் களவுமாக பிடித்து கைது செய்துள்ளனர்